DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 170/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : சாந்தகுமார் |
| Father's Name | : பகழமுடையார் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 29.08.2024 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 29th August 2024.

**1ம் எதிரி ஆஜர். 2 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை :**

**நான்** மடத்துப்பட்டியில்குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் சாந்தாதேவி எனது அக்காமகள். ஆஜர் 1ம் எதிரியை எனக்கு தெரியும். மற்ற எதிரிகளை தெரியும். சுமார் 17 ஆண்டுகளுக்கு முன்பாக 1ம் எதிரி ஜேம்ஸ் என்பவ்ர எங்கள் ஊரில் ஏற்கனவே கிராம நி்ர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தார். அதனால் அவர் எனது அண்ணன் பேச்சியப்பன் மூலமாக அவரது மகனுக்கு பெண் கேட்டு வந்தார். பாம்புகோவிலில் உள்ள அ.சா.1 சாந்தாதேவியின் தாய்மாமா வீட்டில்வைத்து மாப்பிள்ளை வீட்டிலிருந்து நிறைய பேர் வந்து நிச்சயதார்த்தம் நடைபெற்றது. நானும் நிச்சயதார்த்தத்தில் கலந்துகொண்டேன். நிச்சயதார்த்தத்தின்போது அ.சா1 35 பவுன் தங்க நகையும், 2 லட்சம் தொகையும் வரதட்சணையாக கொடுப்பதாக

பேசியதாக என்னிடம் சொன்னார்கள். ஆனால் திருமணத்தின்போது எவ்வளவு நகை பணம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. நிச்சயதார்த்தம் முடிந்து மறுநாள் சங்கரன்கோவிலில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் வைத்து திருமணம் 1ம் எதிரிக்கும், அ.சா.1 க்கும் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்து இரண்டு ஆண்டுகள் கழித்து ஏதோ வரதட்சணை பிரச்சனை ஏற்பட்டதாக என்னிடம் சொன்னார்கள். பேச்சுவார்த்தைக்கு என்னையும் அழைத்தார்கள். ஆனால் நான் கலந்துகொள்ளவில்லை. ஆனால் மாப்பிள்ளை வீட்டார் பாம்புகோவிலில் வந்து பேச்சுவார்த்தை தொடந்தார்கள். 1ம் எதிரிக்கும், அ.சா.1 க்கும் தேவபிரசாத் என்ற ஒரு ஆண்குழந்தை உள்ளார். பேச்சுவார்த்தை என்ன முடிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. பேச்சுவார்த்தைக்கு பின்னிட்டு அ.சா.1ம், 1ம் எதிரியும் சேர்ந்து வாழவில்லை. எதற்காக அ.சா.1 ம், 1ம் எதிரியும் பிரிந்தார்கள் என்று எனக்கு தெரியாது. வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக பாவித்து சாட்சியை அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி செய்ய கோரியதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் இவ்வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது அ.சா.1 குடும்பத்தார்க்கு 1ம் எதிரி குடும்பத்தார்க்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றபோது திருமணத்தின்போது வழங்கப்பட்ட நகை வங்கியில் இருப்பதாகவும், அதனை மீட்டுக்கொடுப்பதாகவும் 1ம் எதிரி ஒப்புக்கொண்டதாக நான் சொன்னேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரியின் குடும்பத்தார்கள் அ.சா.1 யிடம் கூடுதல் வரதட்சணை கேட்டதாக நான் கேள்விப்பட்டதாக போலீசார் விசாரணையின் சொன்னேன் என்றால் சரிதான். அ.சா.1 யின் திருமணத்திற்கு பிறகு சென்னையில் உள்ள ஒரு பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்தார். அ.சா.1 பள்ளியில் பணிபுரிந்து சம்பாதித்த பணத்தை 1ம் எதிரியிடம் கொடுத்ததாக நான்

போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். எனக்கு வழக்கை பற்றிய முழுவிபரம் தெரியும் என்றாலும், போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றாலும், தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

1ம் எதிரிக்கும், அ.சா.1க்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் கேள்விப்பட்டதாக சொல்லும் விசயங்கள் அ.சா.1ன் தகப்பனரான அருள்ராஜ் என்பவர் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 170/2024** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : பூவையா |
| Father's Name | : சுப்பையா |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 29.08.2024 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 29th August 2024.

**1ம் எதிரி ஆஜர். 2 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை :**

நான் மடத்துப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சாந்தாதேவி எனது சித்திமகள். ஆஜர் எதிரி மற்றும் மற்ற எதிரிகளை தெரியும். சுமார் 15,16 ஆண்டுகளுக்கும் முன்பு 1ம் எதிரிக்கும், அ.சா.1 க்கும் பாம்புகோவிலில் உள்ள அ.சா.1 ன் தாத்தா வீட்டில் வைத்து நிச்சயதார்த்தம் நடைபெற்றது. அந்த நிச்சயதார்த்தத்தில் நானும் கலந்துகொண்டேன். அந்த நிச்சயதார்த்தத்தின்போது அ.சா.1 க்கு 35 பவுன் நகையும், 2 லட்சம் தொகையும் வரதட்சணையாக மாப்பிள்ளை வீட்டில் கேட்டார்கள். அதன்படி அ.சா.1 ன் தகப்பனாரான அருள்ராஜ் என்பவர் திருமணத்தின்போது நகையும், பணமும் கொடுத்தார்கள். நிச்சயதார்த்தத்திற்கு மறுநாள் திருமணம் நடைபெற்றது. திருமணத்தில் நானும் கலந்துகொண்டேன். திருமணம் சங்கரன்கோவில் திருக்கோவிலில் நடைபெற்றது. பிறகு சங்கரன்கோவிலில் உள்ள ஒரு திருமண

மண்டபத்தில் வரவேற்பு நடைபெற்றது. திருமணத்தின்போது எவ்வளவு நகை பணம் கொடுத்தார்கள் என்று நான் கவனிக்கவில்லை. திருமணத்தின்போது சீர்வரிசை பொருட்களாக கட்டில், பீரோ, மெத்தை, பிரிஜ், வெண்கலப்பாத்திரங்கள் மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள் சுமார் ரூ.40000 மதிப்புள்ள பொருட்களை வழங்கினார்கள். நான்தான் சீர்வரிசை பொருட்களை 1ம் எதிரியின் வீட்டில் இறக்கிவைத்தேன். திருமணத்திற்கு பிறகு 1ம் எதிரியும், அ.சா.1ம் சுமார் 3 ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்து வ்நதார்கள். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. திருமணத்திற்கு பிறகு 1ம் எதிரியும், அ.சா.1ம் சங்கரன்கோவிலில் உள்ள 1ம் எதிரியின் வீட்டில் வாழ்ந்து வந்தார்கள். அதன்பிறகு இருவருக்கும் இடையில் மனக்கசப்பு ஏற்பட்டு தனித்தனியாக பிரிந்து விட்டார்கள். எதனால் மனக்கசப்பு ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. 1ம் எதிரி வேறொரு பெண்ணுடன் தொடர்பில் இருந்ததால் பிரச்சனை ஏற்பட்டது. அதனால் 1ம் எதிரி அ.சா.1யை அடித்து வீட்டை விட்டு வெளியே அனுப்பிவிட்டார். பிறகு அ.சா.1 தனது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டார். பின்பு 10 நாட்கள் கழித்து நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தினோம். சங்கரன்கோவில் என்ஜிஓ காலனியில் உள்ள 1ம் எதிரியின் வீட்டில வைத்து பேச்சுவார்த்தை நடத்தினோனம். பேச்சுவார்த்தையில் 1ம் எதிரி மட்டும்தான் கலந்துகொண்டார். 1ம் எதிரியின் தந்தையை பேச்சுவார்த்தைக்காக அழைத்தபோது அவர் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள மறுத்துவிட்டார். நீங்கள் செய்யவேண்டுமோ செய்துகொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். 1ம் எதிரியிடம் பேச்சுவார்த்தை செய்தபோது சில நாட்கள் போகட்டும் பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னார். அதன்பிறகு அ.சா.1 சென்னைக்கு சென்றுவிட்டார். அவர் சென்னைக்கு சென்றபிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. 1ம் எதிரி வேறொரு பெண்ணை திருமணம் செய்துகொண்டார். அந்த பெண்ணின் பெயர் எனக்கு தெரியாது. இந்த வழக்கை சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான்மேலே சொன்ன விபரங்களை முதன்முதலில் தற்போது தான் சொல்கிறேன் என்றால் சரிதான். 1ம் எதிரி அரசுப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் எதிரிக்கும், அ.சா.1 க்கும் இடையில் ஏற்பட்ட கருத்துவேறுபாடு

காரணமாக கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் தற்போது சாட்சியம் அளிக்கும் இந்த வழக்கு யாரால் எப்போது புகார் அளிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. அ.சா.1ன் தகப்பனார் அருள்ராஜ் என்பவர் காவல்துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து பணிஓய்வு பெற்றுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1ன் தகப்பனார் அருள்ராஜ் இன்று நீதிமன்றத்திற்கு என்னுடன் வந்துள்ளார் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் என்ன விபரத்தை சாட்சியம் அளிக்கவேண்டும் என்பதை பொறுத்து அருள்ராஜ் எனக்கு சொல்லிக் கொடுத்தார் என்றால் சரிதான். அருள்ராஜ் சொன்ன விபரத்தைதான் நான் தற்போது நீதிமன்றத்தில் சாட்சியமாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது நான் உடன் இருந்ததால் என்க்கு தெரிந்த விபரங்களை சொல்கிறேன். அருள்ராஜ் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அருள்ராஜ் சொன்ன விபரங்களை நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கும், அ.சா.1 க்கும் நிச்சயதார்த்தம் நடைபெற்றபோது நான் கலந்துகொண்டதாக சொல்வதும், நிச்சயதார்த்தத்தின்போது நான் சொன்னதைபோல் நகையும், பணமும் வரதட்சணையாக கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள் என்பது பொய் என்றால் சரியல்ல. அதேபோல் திருமணத்திற்கு பிறகு சீர்வரிசைப்பொருட்களை நான் நேரடியாக 1ம் எதிரி வீட்டிற்கு சென்று இறக்கிவைத்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. அதேபோல் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நானும், 1ம் எதிரியின் வீட்டிற்கு சென்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1ம் எதிரி அ.சா.1யை அடித்து வீட்டைவிட்டு வெளியேற்றியதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**